பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 27 வியாழக்கிழமை 10.06.2021 கதிர் 83

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 1,057 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 1,057 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

முகக்கவசம் அணியாமை, சட்டவிரோதமான முறையில் மாகாண எல்லைகளைக் கடந்தமை மற்றும் சமூக இடைவெளி பேணாமை உள்ளிட்ட

☞ 2

# ஆட்சி மாற்றத்துக்கு ஒன்றிணையுங்கள்!

### எதிர்க்கட்சிகளுக்கு ஹரின் அழைப்பு

**எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்துக்கு முயற்சிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ வலியுறுத்தினார்.**

**ஐக்கிய மக்கள் சக்தியினுள் தேவையற்ற பயத்தை உருவாக்கும் தேவை யாருக்கு உள்ளது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.**

☞ 2



## ஈவிரக்கமற்ற கொரோனா வைரஸ்; 8 நாள் குழந்தையும் பலியெடுப்பு!



பிறந்து எட்டு நாள்களேயான பச்சிளம் குழந்தையொன்று கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்ட நிமோனியாவால் உயிரிழந்துள்ளது.

கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

குறித்த மரணம் தொடர்பான தகவல் சுகாதார அமைச்சால்வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டில் பதிவான மிகவும் குறைந்த வயது கொரோனா மரணமாக இது கருதப்படுகின்றது.

## மேலும் 67 பேர் பரிதாபச் சாவு

### நாளொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட அதிகூடிய கொரோனா மரண பதிவு

இலங்கையில் மேலும் 67 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

சுகாதார அமைச்சால் நேற்று நள்ளிரவு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஒரே தடவையில் உறுதிப்படுத்தப்பட்ட அதிகளவான கொரோனா மரணங்கள் பதிவான சந்தர்ப்பம் இதுவாகும்.

மே 17 முதல் மே 31ஆம் திகதிவரை 19 பேரும், ஜூன் 1 முதல் ஜூன் 08 வரை 48 பேரும் கொரோனாவால்

☞ 2

## திருமண நிகழ்வில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தல்

பயணத்தடைக்காலத்தில் திருமண மண்டபத்தில் இடம்பெற்ற திருமண நிகழ்வு தொடர்பில் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. திருமண நிகழ்வில் பங்கேற்றவர்களைத் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் 14 நாள்கள் தனிமைப்படுத்துமாறும், அவர்களுக்கு பி.சி.ஆர். சோதனைகளை மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம்

☞ 2

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மீது வவுனியாவில் தாக்குதல்!



**(வவுனியா நிருபர்)**

வவுனியா, சாந்தசோலைப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தாக்குதலுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

☞ 2

## இந்திய 'டெல்டா' வைரஸ் திரிவுடன் மேலும் ஒருவர் இங்கு அடையாளம்

### உறுதிப்படுத்தினார் மருத்துவர் சந்திம ஜீவந்தர



இந்தியாவில் பரவும் அதிக வீரியம் கொண்ட டெல்டா கொரோனா வைரஸ் திரிவுடன் இலங்கையில் மேலும் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனிமைப்படுத்தல் நிலையில் இருந்த ஒருவரின் வைரஸ் மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியபோதே இவ்விடயம் கண்டறியப்பட்டது.

கொரோனா டெல்டா வைரஸ் வகையால் பாதிக்கப்பட்ட இரண்டாவது இலங்கையர் இவரென்பது குறிப்பிடத்தக்கது.

தனிமைப்படுத்தல்

☞ 2

## சிங்கள ராவய அமைப்பின் செயலருக்கும் கொரோனா



சிங்கள ராவய அமைப்பின் பொதுச் செயலாளர் மாகல்கந்தே சுதந்த தேரருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முன்னதாக அவருடைய வாகனச் சாரதிக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இரத்தினபுரியில் நடைபெற்ற இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரரின் தாயாரின் இறுதிச்சடங்கில் மாகல்கந்தே சுதந்த தேரர் கலந்துகொண்டுள்ளார்.

☞ 2

### Education Page

வாரம்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலைக்கதிர் பத்திரிகையில் மாணவர்களின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவரும் ஆங்கில பக்கத்திற்கு (Education page) தங்கள் பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான ஆக்கங்களை கீழ்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். மறக்காமல் மாணவர்களின் முழுப்பெயர், பாடசாலை, தரம், தொடர்பு இலக்கம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புங்கள்.

Kalaikkathiredu@gmail.com
076 443 8622

**நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் - 07இற்கான விஞ்ஞானப் பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப் பட்டுள்ளது.**

## திருமண நிகழ்வில் .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டளை வழங்கியுள்ளது.

சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பண்டத்தரிப்பு பிரான்பற்றில் சில தினங்களுக்கு முன்னர் திருமண நிகழ்வு நடைபெற்றுள்ளது. வீட்டில் திருமணத்துக்கு அதுவும் வீட்டாருடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தப் பகுதியிலுள்ள திருமணமண்டபத்தில் உறவினர்களுடன் திருமணம் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் சுகாதாரப் பகுதியினருக்கு முறைப்பாடும் செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து திருமண நிகழ்வில் பங்கேற்ற 47 பேர் இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து அடையாளம் காணப்பட்டவர்களைத் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மன்று கட்டளை பிறப்பித்துள்ளது.

## ஆட்சி மாற்றத்துக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப் பதவி இன்னொருவருக்கு செல்லக் கூடும் என்ற பயம் கட்சியினுள் நிலவுகின்றதா என்று கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ என்பது உறுதியாக இருக்கும்போது, அதனை விசேடமாக உறுதிப்படுத்திக் கொள்ள வாக்கெடுப்பு நடத்தியது முட்டாள்தனமான செயற்பாடு என்றும் ஹரின் சாடினார்.

கட்சியில் கருத்து வேறுபாடுகள் இல்லை என்றும், தான் இரண்டு மாத கால விடுமுறையில் இருப்பதால் அது குறித்து விளக்கமாகக் கூற முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியினுள் தேவையற்ற பயத்தை ஏற்படுத்த வேண்டிய தேவை யாருக்கு ஏற்பட்டது என்பதைத் தேடிப் பார்க்க வேண்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைய மாட்டார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

எனினும், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஆட்சி மாற்றத்துக்கு முயற்சிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## சிங்கள ராவய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதேபோல், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட அமைச்சர்கள் சிலரும் இத்தேகன்த சத்தாதிஸ்ஸ தேரரின் தாயாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய 'டெல்டா' ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையில் இருந்தவருக்கு பி.1.617 (டெல்டா) வைரஸ் தொற்றியிருப்பதை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர உறுதிப்படுத்தியுள்ளார்.

## தனிமைப்படுத்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 27 ஆயிரத்து 977 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

பயணக் கட்டுப்பாடுகள் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மேலும் 67 பேர் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயிரிழந்துள்ளனர்.

43 ஆண்களும், 24 பெண்களுமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்படி கொரோனாவால் பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 910 ஆக அதிகரித்துள்ளது.

## பொதுச் சுகாதாரப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சாந்தசோலைப் பகுதியில் நேற்று மாலை, முறையாக முகக் கவசம் அணியாது சென்ற இளைஞர் ஒருவரை முறையாக அதனை அணியுமாறு எச்சரித்தபோது அந்த இளைஞர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளான பொதுச் சுகாதாரப் பரிசோதகர் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபரைக் கைதுசெய்வதற்காக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@
gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தயாராகிறது இரும்புக் கரம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்குத் துடியாய்த் துடித்த பலரும் இப்போது தலையில் அடித்துக் கொள்கின்றனர்.

அந்த வரிசையில் இப்போது முன்னணியில் இருப்பவர் கொழும்பு நாரஹன்பிட்டிய அபேராம விகாரையின் விகாராதிபதி வண. முருந்தெட்டுவே ஆனந்த தேரர்.

தாங்கள் செய்த வேலைக்கு இனி நாட்டையும் மக்களையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறும் அளவுக்கு அவர் வந்து விட்டார்.

ராஜபக்ஷக்கள் அணிக்கு முருந்தெட்டுவே தேரர் மிக முக்கியமானவர். 2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷகளுக்கு நாட்டு மக்கள் சரியான பாடம் புகட்டி வீட்டுக்கு அனுப்பியபோது, ராஜபக்ஷக்களுடன் சகல வகையிலும் ஆதரவளித்து, ஒன்றித்து நின்ற ஒரு சில பிரமுகர்களில் அவரும் ஒருவர்.

ஜனாதிபதி பதவியிலிருந்து ஒரே நாளில் சாதாரண குடிமகனான – முன்னாள் ஜனாதிபதியாக – வீட்டுக்கு அனுப்பப்பட்ட மஹிந்த ராஜபக்ஷவை அந்தச் சமயத்தில் அரவணைத்தவர் முருந்தெட்டுவே தேரர்தான்.

தமது அபேராம விகாரையில் மஹிந்த ராஜபக்ஷ அரசியல் அலுவலகத்தைத் திறந்து, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் துணிச்சலுடன் இடமளித்தவர். சர்ச்சைக்குரிய ஊடக சந்திப்புக்களை அங்கிருந்தபடிதான் மஹிந்த ராஜபக்ஷ அப்போது மேற்கொண்டு தன்னையும் தனது அரசியல் தரப்பையும் மீண்டும் உறுதியாக நிலைநிறுத்தினார். அதனை ஒட்டி அப்போதைய ஆட்சியாளர்களிடம் இருந்து வந்த பல்வேறு அழுத்தங்களைத் துணிச்சலுடன் எதிர்கொண்டவர் முருந்தெட்டுவே தேரர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமது தரப்பின் வேட்பாளராக தமது தம்பியார் கோட்டாபய ராஜபக்ஷவை, மஹிந்த ராஜபக்ஷ அறிவித்தபோது, அந்த வெற்றிக்காக முழு மூச்சாக உழைத்தவர் ஆனந்தமுருதெட்டுவ.

அவரே இப்போது கோட்டாபய ராஜபக்ஷ அரசின் நடவடிக்கைகளினால் விசனமுற்று, எரிச்சலின் உச்சிக்குச் சென்றிருக்கின்றார். இனிமேல் நாட்டையும் நாட்டு மக்களையும் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்று அவர் கூறுமளவுக்கு நிலைமை சென்றுள்ளது.

"நாட்டைத் தாக்கியுள்ள கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தவும், சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முறையான கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்படவில்லை.

"சுகாதார அமைச்சின் பொறுப்பற்ற செயற்பாட்டை பலமுறை சுட்டிக்காட்டியும் எவ்வித மாற்றமும் இதுவரையில் ஏற்படவில்லை. அனைத்துத் தரப்பினரது யோசனைகளையும் ஒன்றிணைத்து சிறந்த திட்டத்தை வகுக்குமாறு கேட்டோம். எமது கருத்துகளுக்கு மதிப்பளிக்கப்படவில்லை. தேர்தல் காலத்தில் மாத்திரம் நாம் குறிப்பிட்ட கருத்துகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டன" – என்று ஊடகவியலாளர் மாநாட்டைக் கூட்டி அறிவித்திருக்கின்றார் அவர்.

தேர்தல் வெற்றிக்குத் தங்களைப் பயன்படுத்திய கோட்டா ஆட்சிப் பீடம், நாட்டைச் சரியான முறையில் வழி நடத்தும் விடயத்தில் தங்கள் ஆலோசனையைச் செவிமடுக்கத் தயாரில்லை என்ற ஆதங்கம் பச்சையாகவே அவரது கருத்தில் எதிரொலிக்கின்றது.

இந்த அரசின் மீது நாட்டின் மக்கள் கொண்டுள்ள வெறுப்பு தற்போது நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றதே தவிர, குறைவடையவில்லை. இந்த அரசின் மீது வெறுப்புக் கொண்டிராத மக்களைக் காண்பது தற்போது அரிதாகவே உள்ளது என்றும் யதார்த்தப் புறநிலைமையை அவர் தெட்டத்தெளிவாக வெளிப்படுத்துகின்றார்.

"அரசின் முறையற்ற செயற்பாடுகளை விமர்சித்துப் பொதுமக்கள் முகப்புத்தகத்திலும் கருத்துக்களைப் பதிவேற்றவும் செய்கின்றனர். பொதுமக்களின் இவ்வாறான செயற்பாடுகள் அவர்கள் அடைந்துள்ள ஏமாற்றத்தையே வெளிப்படுத்துகின்றன." –என்று உண்மை நிலைவரத்தை அவர் வெளிப்படுத்துகின்றார்.

இந்த விவகாரத்தில் அரசு தன்னை – தனது – செயற்பாடுகளை திருத்திக் கொண்டு, மக்களிடம் நல்ல பெயர் எடுப்பதை விடுத்து, மாற்று வழிகளை – மார்க்கங்களை – தேடுகின்றது. அரசுக்கு எதிரான நிலைப்பாடுகளைப் பகிரங்கமாகத் தெரிவிப்போரை வேறு வழிகளில் கையாள அது முயலுகின்றது. மக்களின் கருத்தெழுச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்க அது தயாராகின்றது. சட்டத்தின் பெயரால் புதிய விதிமுறைகளை அது ஏற்படுத்துகின்றது.

சமூக ஊடகங்களில் போலிச் செய்திகள் வெளியிடுதல் மற்றும் பகிர்தல் ஆகியவற்றை மேற்கொள்பவர்கள் பிடியாணையின்றிக் கைது செய்யப்படுவர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அறிவித்திருக்கின்றமை இந்தத் திட்டத்தின் உள்நோக்கத்தின் வெளிப்பாடுதான்.

2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைக்கான சர்வதேச பட்டய சட்டத்தையும் கூட இந்த விடயத்தில் பிரயோகிக்கப் போவதாக பொலிஸ் பேச்சாளர் கூறுகின்றார். இந்தச் சட்டத்தின் கீழாகக் கைது செய்யப்படுவோரைப் பிணையின்றி விளக்கமறியலில் வைக்க முடியும். ஆக, அரசுக்கு எதிராகக் கருத்துக் கூறுவோரை இரும்புக் கரம் கொண்டு அடக்க அரசு தயாராகி வருகின்றது என்பது மட்டும் உண்மை.

## ரணில் விக்கிரமசிங்கவைப் பயன்படுத்தி எதிர்க்கட்சியை பலவீனப்படுத்த முயற்சி

### நளின் பண்டார குற்றச்சாட்டு



எதிர்க்கட்சியை பலவீனப்படுத்துவதற்கு ரணில் விக்ரமசிங்கவை பயன்படுத்த அரசாங்கம் முயலக்கூடும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்குள் நுழைவது குறித்து அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேயே அதிகம் பேசுகின்றார் என நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தொடர்ந்தும் பேசிய அவர் –

பெருமளவிற்கு நெருக்கடியில் சிக்குண்டுள்ள அரசாங்கம் அதிலிருந்து விடுபடுவதற்காக ரணில் விக்கிரமசிங்கவை அமைச்சரவையில் இணைத்துக்கொள்வதற்கான முயற்சிகளில் ஈடுபடக்கூடும் என அவர் தெரிவித்துள்ளார்.

அல்லது ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்துக்கு வந்த பின்னர் எதிர்க்கட்சி இரண்டாகும் என அரசாங்கம் கற்பனை செய்யக்கூடும் என நளின்பண்டார தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை இழக்கும்போது இவ்வாறான முயற்சிகள் இடம்பெறுகின்றமை வழமை எனவும் அவர் தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்தி தன்னுடைய நெருக்கடிகளில் இருந்து மீள்வதற்கு ரணில் விக்கிரமசிங்கவை கூட பயன்படுத்தலாம் என்பதே அரசாங்கத்தின் திட்டம் என அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை தனது பக்கம் அரசாங்கம் எடுப்பது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை.

அவர் அனுபவம் உள்ள அரசியல்வாதி, அவருக்கு தனிப்பட்ட இராஜதந்திர தொடர்புகள் உள்ளன, எங்களுக்கு ஆட்சேபனையும் இல்லை. ஆனால் எதிர்க்கட்சி பலவீனப்படாது என நளின் பண்டார மேலும் தெரிவித்துள்ளார்.

## ஐ.நா. தொடர்ந்தும் இலங்கைக்கு உதவும்

### ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் உத்தரவாதம்



ஐ.நா. தொடர்ந்தும் இலங்கைக்கு உதவியை வழங்கும் என ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உறுதியளித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தனவுடன் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின்போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டதாக ரஷ்ய வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும் இந்த சந்திப்பில் தற்போதையை கொரோனாத் தொற்று நிலைவரம், ரஷ்யா – இலங்கை வர்த்தகம், பொருளாதாரம் மற்றும் இராணுவ – தொழில்நுட்ப ஒத்துழைப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இதற்கிடையில், கொரோனாத் தொற்றால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதில் இலங்கைக்கு ரஷ்யா அளித்த ஆதரவுக்கு அமைச்சர் தினேஷ் குணவர்தன தனது பாராட்டுகளைத் தெரிவித்தார்.

## புகலிடக் கோரிக்கையாளர்களை நாடு கடத்தியது ஜேர்மனிய அரசு

ஜேர்மனியில் புகலிடம் கோரிய இலங்கை தமிழர்கள் பலர் நேற்று (புதன்கிழமை) நாடு கடத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பிராங்பேட் விமான நிலையத்தில் இருந்து அவர்கள் இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 20 தொடக்கம் 25 வரையான இலங்கையர்கள் நாடுகடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நாடுகடத்தப்பட்ட இலங்கையர்கள் தொடர்பான சரியான விவரங்கள் இதுவரையில் வெளியாகவில்லை. இவர்கள் நாளைய தினம் இலங்கையை வந்தடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜேர்மனியில் புகலிடம் கோரிய 30 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டிருந்தனர். இந்நிலையில், சுமார் மூன்று மாத கால இடைவெளியில் இன்று மேலும் பலர் நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நாடு கடத்தப்படும் சம்பவங்கள் ஜேர்மனியில் இனியும் தொடரக் கூடும் என அங்கிருக்கும் சமூக ஆர்வலர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில், துன்புறுத்தல் மற்றும் சித்திரவதை அச்சுறுத்தல் இருக்கின்ற நிலையில், தமிழ் அகதிகளை இலங்கைக்கு நாடு கடத்த அதிகாரிகள் முயற்சிக்கின்றனர் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும், இந்த நாடுகடத்தப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக பிராங்பேர்ட் விமான நிலையத்தில் பெரும் போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் தமிழர்கள், அம்னஸ்டி இன்டர்நேஷனல் மற்றும் பிற மனித உரிமை அமைப்புகளின் ஆர்வலர்களுடன் சுமார் 70 மணி நேரத்திற்கும் மேலாக நாடு கடத்தும் நடவடிக்கையைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## ஓய்வூதியம் பெற்றுள்ள தாதியர்கள் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு!

### பிரதமர் சுகாதார அமைச்சருக்கு கோரிக்கை

ஓய்வூதியம் பெற்ற தாதியர்களை தேவைக்கு ஏற்ப ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சருக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

அலரிமாளிகையில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இந்த ஆலோசனை வழங்கினார் எனப் பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் இந்த சந்திப்பின்போது, தாதியர்கள் பற்றாக்குறை மற்றும் அவர்கள் முகம் கொடுத்துவரும் பிரச்சினை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக பிரதமரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.




# 50 கோடி பைஸர் தடுப்பூசிகளை உலக நாடுகளுக்கு இலவசமாக வழங்க அமெரிக்கா தீர்மானம்

உலக நாடுகளுக்கு 50 கோடி கொரோனாத் தொற்று தடுப்பூசியை இலவசமாக வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது.

பெருந்தொற்று பரவத் தொடங்கியதும் உலகம் முழுவதும் தடுப்பூசிக்கான தட்டுப்பாடு ஏற்பட்டது. இதனால் பெரும்பாலான நாடுகள், வளர்ந்த நாடுகளுக்கு அழுத்தம் கொடுத்தன. இந்நிலையில் அமெரிக்காவில் பாதிப் பேருக்கும் மேல் தடுப்பூசி போட்டுக் கொண்டதால் அங்கு கொரோனாவின் தாக்கம் வெகுவாகக் குறைந்துள்ளது.

இதையடுத்து பைஸர்-பயோஎன்டெக் கொரோனாத் தடுப்பூசியை உலக நாடுகளுக்கு இலவசமாக வழங்க உள்ளதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் முடிவு செய்துள்ளார். இதற்கான முறையான அறிவிப்பை நாளை நடைபெற உள்ள ஜி 7 நாடுகளின் உச்சி மாநாட்டில் அறிவிப்பார் எனக் கூறப்படுகிறது.

# டிக்-டாக்

## செயலிக்கு தடை எனும் முடிவை கைவிட்டது அமெரிக்கா

சீனாவின் டிக்-டாக் மற்றும் வீசட் செயலிகளுக்கு அமெரிக்காவில் தடை விதித்து கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் அப்போதைய ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து டிக்டாக் நிறுவனம் சார்பில் தொடரப்பட்ட வழக்குகள் அமெரிக்க நீதிமன்றில் இன்னும் நிலுவையில் உள்ளன. இந்த நிலையில் கடந்த ஜனவரி மாதம் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம் டிக்-டாக் மற்றும் வீசட் செயலிகளுக்கு தடை விதிக்கும் முந்தைய நிர்வாகத்தின் முயற்சிக்கு ஆதரவு தெரிவித்தது. இந்த நிலையில் திடீர் திருப்பமாக டிக்-டாக் மற்றும் வீசட் செயலிகளுக்கு தடை விதிக்கும் முடிவை ஜோ பைடன் நிர்வாகம் தற்போது கைவிட்டு விட்டது.



# எல் சால்வடாரில்


## இணையதள பணமான பிட்காயினை பயன்படுத்த முதல் நாடாக அனுமதி

உலகின் முதல் நாடாக எல் சால்வடாரில் இணையதள பணமான பிட்காயினை அதிகாரப்பூர்வ பணமாக அறிவித்துள்ளது

மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடாரில் மற்ற நாணயங்களை போல் கிரிப்டோகரன்சியான பிட்காயினையும் மக்கள் சர்வசாதாரணமாக பயன்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்த அதிபர் நயீப் புக்ளே தாக்கல் செய்த பரிசோதனைக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்துள்ளதால், 90 நாள்களில் அமுலுக்கு வரும் என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

பிட்காயினை அதிகாரப்பூர்வ நாணயமாக்குவதன் மூலம் எல் சல்வேடாரில் வேலைவாய்ப்பு அதிகரிக்கும், மற்ற நாடுகளுடன் வர்த்தக ரீதியான அணுகுமுறையை எளிதாக்க முடியும் என அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பு வெளியான சில மணி நேரங்களில் பிட்காயின் சந்தை மதிப்பு 6 சதவீதம் உயர்ந்து 35 ஆயிரத்து 200 அமெரிக்க டொலர்களில் நிலைபெற்று, ஒட்டுமொத்த மதிப்பு 640 புள்ளி 17 பில்லியன் டொலராக உச்சம் தொட்டது.



# பிரான்சில் வெளிநாட்டவர்கள் சுற்றுலா வர தளர்வு அறிவிப்பு

பிரான்ஸில் கொரோனா வைரஸ் பாதிப்பு மெல்ல மெல்ல குறைந்து வருவதைத் தொடர்ந்து அந்த நாட்டு அரசு கொரோனா கட்டுப்பாடுகளில் பல்வேறு தளர்வுகளை அறிவித்து வருகிறது.

அந்த வகையில் வெளிநாட்டினர் பிரான்ஸ் க்கு சுற்றுலா வருவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளில் சில தளர்வுகளை அரசு தற்போது அறிவித்துள்ளது.

அதாவது பிரான்ஸ்க்கு சுற்றுலாவரும் வெளிநாட்டினர் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு கொரோனா பரிசோதனை கட்டாயம் இல்லை என பிரான்ஸ் அரசு அறிவித்துள்ளது. கொரோனா பாதிப்பு குறைவாக உள்ள ஆஸ்திரேலியா, இஸ்ரேல், ஜப்பான், நியூசிலாந்து , சிங்கப்பூர், தென்கொரியா மற்றும் ஐரோப்பிய கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இருந்து வரும் வெளிநாட்டினருக்கு மட்டுமே இந்த தளர்வுகள் பொருந்தும் என பிரான்ஸ் அரசு தெரிவித்துள்ளது.

அதேசமயம் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ள நாடுகளுக்கு ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகள் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கண்ணிவெடிகள் அகற்றும் தொழிலாளர்கள் 10 பேர் ஆப்கானிஸ்தானில் சுட்டுக்கொலை

நாடு முழுவதும் உள்ள பல்வேறு பகுதிகளில் தலிபான் தீவிரவாதிகள் பொலிஸார் மற்றும் ராணுவ வீரர்களை கொலை செய்யும் நோக்கில் அவர்கள் செல்லும் வழியில் கண்ணி வெடிகளை புதைத்து வைக்கின்றனர். ஆனால் பெரும்பாலும் அப்பாவி மக்களே இந்த கண்ணி வெடிகளில் சிக்கி உயிரிழக்கின்றனர்.

இதனால் ஆப்கானிஸ்தானில் பல தொண்டு நிறுவனங்கள் வெடிக்காத கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றன. அந்த வகையில் ஹாலோ என்கிற தொண்டு நிறுவனத்தை சேர்ந்த தொழிலாளர்கள் வடக்கு மாகாணமான பாக்லானில் முகாமிட்டு கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் ஹாலோ தொண்டு நிறுவன தொழிலாளர்கள் நாள் முழுவதும் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டு விட்டு இரவில் முகாமில் தூங்கிக்கொண்டிருந்தனர்.

அப்போது அவர்களது முகாமுக்குள் துப்பாக்கிகளுடன் நுழைந்த தீவிரவாதிகள் தூங்கிக்கொண்டிருந்த தொழிலாளர்களை சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் 10 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

மேலும் பலர் படுகாயமடைந்தனர். இந்த தாக்குதலுக்கு உடனடியாக எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. அதேசமயம் தலிபான் தீவிரவாதிகளே இந்த தாக்குதலை நடத்தியதாக ஹாலோ தொண்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.



# நாளொன்றுக்கான கொரோனாத் தொற்று ஒரு இலட்சத்தைவிட குறைவாகத் தொடர்கிறது

இந்தியாவில் இன்று காலை வரையிலான 24 மணி நேரத்தில் 94,052 பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. இதன் மூலம், தொடாந்து மூன்றாவது நாளாக தினசரி கொரோனா பாதிப்பு ஒரு லட்சத்துக்குக் கீழ் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக மத்திய சுகாதாரத் துறை தரவுகள் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதன்படி, கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை தொடாந்து கணிசமாகச் சரிந்து, 11,67,952 ஆக உள்ளது. இந்த எண்ணிக்கை 10 ஆவது நாளாக 20 லட்சத்திற்கும் குறைவாக உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் கொரோனாத் தொற்றுக்கு சிகிச்சைபெற்று வந்தவர்களில் ஒரே நாளில் 6,148 பேர் உயிரிழந்துள்ளதால் இதுவரை மொத்த உயிரிழப்பு 3,59,676 ஆக அதிகரித்துள்ளது. கடந்த மாதம் 19 ஆம் திகதி 4,552 பேர் உயிரிழந்ததே அதிகபட்ச தினசரி உயிரிழப்பாக இதுவரை இருந்து வந்தது.

தொடாந்து 28 ஆவது நாளாக புதிய பாதிப்புகளை விட தினசரி குணமடைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. ஒரே நாளில் 1,51,367 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதுவரை மொத்தம் 2,76,55,493 போ கொரோனாவிலிருந்து மீண்டுள்ளனா. இதன்படி, மொத்தப் பாதிப்பில் குணமடைந்தோர் எண்ணிக்கை 94.55 சதவீதமாக அதிகரித்துள்ளது. இன்று காலைவரையிலான 24 மணி நேரத்தில் 20, 04,690 பரிசோதனைகளும், இந்தியாவில் இதுவரை மொத்தம் 37,21,98, 253 பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட் டுள்ளன. நாடு தழுவிய தடுப்பூசித் திட்டத் தின் கீழ் இதுவரை 23,90,58,360 பேருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன

# தமிழகத்தின் புதிய சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர் 21ஆம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளதாக அறிவிப்பு

தமிழகத்தின் 16 ஆவது சட்டப்பேரவையின் முதல் கூட்டத்தொடர்வரும் 21ஆம் திகதி ஆளுநர் உரையுடன் தொடங்கவுள்ளதாக பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவித்துள்ளார். இந்த அறிவிப்புக்கு முன்பாக, ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை, ஆளுநர் மாளிகையில் முதல்வா மு.க.ஸ்டாலின் நேற்று மாலை சந்தித்துப் பேசியிருந்தார். இந்தச் சந்திப்பின் போது, கொரோனா நோய்த்தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்து முதல்வரிடம் ஆளுநர் கேட்டறிந்தார். ஆளுநர் உரை நிகழ்த்தும் முதல் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் குறித்தும் ஆலோசிக்கப்பட்டதாக தமிழக அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்தச் சந்திப்பின்போது, அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளா வெ.இறையன்பு, முதல்வரின் செயலாளர் த.உதயச்சந்திரன், ஆளுநரின் செயலாளர் ஆனந்த் ராவ் விஷ்ணு பாட்டீல் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்த ஆலோசனைக்குப் பிறகு, சட்டப் பேரவை கூடுவதற்கான திகதியை பேரவைத் தலைவர் மு.அப்பாவு அறிவித்தார். இதற்கான செய்தியாளர் சந்திப்பு தலைமைச் செயலகத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

அங்கு அவர் சட்டப்பேரவையின் முதல் கூட்டத் தொடர் வரும் 21ஆம் திகதி காலை 10 மணிக்குக் கூடுகிறது. அன்றைய தினம் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் உரையாற்றவுள்ளார். அவர் உரை நிகழ்த்திய பிறகு, சட்டப்பேரவை அலுவல் ஆய்வுக் கூட்டம் நடைபெறும். சட்டப்பேரவைக் கூட்டத் தொடரை எத்தனை நாள்களுக்கு நடத்துவது, என்னென்ன அலுவல்களை எடுத்துக் கொள்வது ஆகியன குறித்து அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

கூட்டத் தொடரை தொடங்குவதற்கான திகதிக்கு ஆளுநர் ஒப்புதல் தெரிவித்துள்ளார். சென்னை சேப்பாக்கம் கலைவாணர் அரங்கத்தின் மூன்றாவது தளத்தில் பேரவைக் கூட்டத் தொடர் நடைபெறும். பேரவை கூட்டத் தொடருக்கு முன்பாக, சட்டப்பேரவை உறுப்பினர்கள், பேரவை அதிகாரிகள், அலுவலாகள், பத்திரிகையாளர்கள் என அனைவருக்கும் கொரோனா நோய்த்தொற்று பரிசோதனை நடத்தப்படும். யாருக்கெல்லாம் நோய்த்தொற்று இல்லையோ அவர்கள் மட்டுமே பேரவை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படுவர்.பேரவையில் உறுப்பினர்கள் சமூக இடைவெளியுடன் அமரும் வகையில் இருக்கைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கேள்வி நேரத்துக்கான வாய்ப்புகள் இருக்கின்றன எனத் தெரியவில்லை. கேள்விகளுக்கான பதில்களை சம்பந்தப்பட்ட துறைகளிடம் இருந்து பெற்ற பிறகே பேரவையில் கேள்விகளைச் சேர்க்க முடியும். பொது முடக்கம் காரணமாக, அரசு அலுவலகங்கள் இயங்காமல் இருந்தன. எனவே, கேள்விகளுக்கான பதில்களைப் பெறுவதில் சிரமம் உள்ளது' என்று தெரிவித்தார். பேரவைக்கு புதிதாகத் தோ்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கடந்த மே 11ஆம் திகதி பதவியேற்றுக் கொண்டனர். அந்தக் கூட்டத்தில் பேரவைத் தலைவராக மு.அப்பாவு, துணைத் தலைவராக கு.பிச்சாண்டி இருவரும் தேர்வு செய்யப்பட்டனர்.

தி.மு.க. தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் முதல் கூட்டத் தொடரில் ஆளுநர் பன்வாரிலால் உரையாற்றவுள்ளார். இதனால், இந்த உரையில் பல முக்கிய அறிவிப்புகள் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பேரவையில் முன்மொழியப்பட்டு அதன்மீது விவாதங்களும் நடைபெறவுள்ளன. இந்த விவாதங்களுக்குப் பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுவார். இதன்பின்பு, பேரவைக் கூட்டத் தொடர் ஒத்திவைக்கப்படும்.

இந்தக் கூட்டத் தொடரில் பல முக்கிய தீர்மானங்களை தமிழக அரசு தாக்கல் செய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக, நீட் தேர்வு, வேளாண் சட்டங்கள் ஆகியவற்றை ரத்துச் செய்யக் கோரி மத்திய அரசை வலியுறுத்தும் தீர்மானங்கள் பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு குரல் வாக்கெடுப்பு மூலமாக நிறைவேறும் எனத் தெரிகிறது. சட்ட மேலவை அமைக்கப்படும் என தி.மு.கவின் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அது குறித்த அறிவிப்பு ஆளுநர் உரையில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபற்றிய தீர்மானமும் பேரவையில் தாக்கலாக வாய்ப்புகள் இருக்கின்றன எனவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மும்பையில் அடுக்குமாடிக் கட்டடம் இடிந்துவீழ்ந்தது

## 11 பேர் உயிரிழப்பு; பலர் காயம்



மும்பையில் இரண்டு அடுக்குமாடிகள் கொண்ட குடியிருப்புக் கட்டடம் ஒன்று கனமழையினால் நேற்று இடிந்து வீழ்ந்ததில் 8 குழந்தைகள் உள்பட 11 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 7 பேர் காயமடைந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

மகாராஷ்டிர மாநிலத்தில் தென்மேற்குப் பருவமழை நேற்று ஆரம்பித்து, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் கனமழையாகப் பெய்து வருகிறது.

இந்த நிலையில் மும்பை மாலட் மேற்கு பகுதியில் இருந்த இரண்டு அடுக்குமாடிகளைக் கொண்ட குடியிருப்பு கட்டடம் நேற்று இரவு 11.10 அளவில் கனமழையினால் இடிந்து விழுந்தது. இரண்டு தளம்கொண்ட குடியிருப்பு கட்டடம் இடிந்து விழுந்ததில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 7 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் முதல்கட்ட தகவல் வெளியானது.

இதன் பின்னர் காவல்துறையினரும், தீயணைப்புத் துறையினரும் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டு வந்தனர். அப்போது மேலும் 2 சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டன. இதையடுத்து உயிரிழப்பு எண்ணிக்கை 11 ஆக அதிகரித்தது. மேலும் சிலர் கட்டட இடிபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# கொரோனா விதிகளை மீறி ஒரே ஓட்டோவில் அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினரும் பயணம்

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த தி.மு.க. பிரமுகரும் கட்சியின் சென்னை மேற்கு மாவட்ட முன்னாள் செயலாளருமான ஜெ.அன்பழகனின் முதலாமாண்டு நினைவு அஞ்சலி நிகழ்வு சென்னை தியாகராய நகரில் நடைபெற்றது.

இதில் பங்கேற்பதற்காக சென்ற தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அமைச்சர்களான சேகர் பாபு, அன்பில் மகேஷ் ஆகியோர் ஓட்டோவின் பின்பக்க இருக்கையில் ஒன்றாக அமர்ந்திருந்தது சென்றுள்ளனர். கொரோனாப் பரவல் இருக்கும் இந்த நேரத்தில், ஓட்டோவில் பின் வரிசையில் இரண்டு பேர் மட்டுமே அமர்ந்து செல்ல வேண்டும் என்று அரசாங்கத்தின் விதி இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது மூன்று பேர் இந்த ஊரடங்கு காலத்தில் ஒரே இருக்கையில் அமர்ந்து சென்றது விதி மீறலாகப் பார்க்கப்படுகிறது. இந்தச் சம்பவம் சமூக வலைத்தளங்களில் சர்ச்சையாகி பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

குறித்த படம் விவாதப் பொருளானதைத் தொடர்ந்து, 'அது குறுகலான தெரு என்பதால் ஓட்டோவில் சென்றோம்' என அமைச்சர்கள் சார்பில் விளக்கம் தரப்பட்டுள்ளது.



## ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில்

# மூன்று கிராமங்கள் முழுமையாக முடக்கம்

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு, மாஞ்சோலை ஆகிய கிராமங்கள் நேற்று புதன்கிழமை முதல் மறுஅறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என ஓட் டமாவடி சுகாதார வைத்திய அதிகாரிடாக்டர்எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா நோயாளிகள் அதிகரித்து காணப்படுவதுடன், மரணங்களும் ஏற்பட்டுள்ள நிலையில் வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று அவசரக் கூட்டம் இடம்பெற்ற போதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மீராவோடை கிழக்கு, மீராவோடை மேற்கு, மாஞ்சோலை ஆகிய கிராமங்களில் அதிக கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்ட நிலையிலும், செவ்வாய்க்கிழமை இரவு கொரோனாத் தொற்றினால் ஒரு மரணமும் இடம்பெற்றுள் ளது. இதன் பிரகாரம் குறித்த பகுதிகள் தனிமைப்படுத்தல் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு தனிமைப்படுத்தல் பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு ஓட்டமாவடி பிரதேச செயலகம் ஊடாக அத்தியாவசிய பொருள்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், குறித்த பகுதி மக்கள் தனிமைப்படுத்தலினை மீறாது வீடுகளில் இருந்து கொள்ளுமாறும் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை 133 நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் செவ்வாய்க்கிழமை மாலை கிடைக்கப்பட்டதன் பிரகாரம் 29 தொற்றாளர்கள் ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆலையடிவேம்பு பிரதேசத்தில்

# முதற்கட்டமாக மூவாயிரம் சினோபோர்ம் தடுப்பூசிகள்

ஆலையடிவேம்பு பிரதேசத்திற்கு 3,000 வரையிலான சினோபோர்ம் தடுப்பூசிகளே முதற்கட்டமாக கிடைக்கலாம் என நம்பிக்கை தெரிவித்த ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் இந்த வாய்ப்பை பிரதேச மக்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.



ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நூறு வீதம் பாதுகாப்புடைய குறித்த தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள மக்கள் அச்சம் கொள்ள தேவையில்லை. ஏனெனில் பலதரப்பட்ட சோதனைகளைத் தாண்டி உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் இலங்கை வைத்திய நிபுணர் குழு ஆகியோரின் சிபாரிசின் அடிப்படையில் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கமையவே குறித்த தடுப்பூசிகள் நமது நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. இதுவரையில் பல லட்சம் பேருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டும் உள்ளது. எனினும் இத் தடுப்பூசியினை பெற்றுக்கொண்டவர்களுக்கு எவ்வித பாரிய பக்கவிளைவுகளும் ஏற்படவில்லை. இந்நிலையில் கல்முனை பிராந்திய சுகாதார பிரிவிலும் தடுப்பூசிகள் ஏற்றும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஆயினும் 26,000 இற்கும் மேற்பட்ட மக்கள் வாழும் ஆலையடிவேம்பு பிரதேசத்திற்கு 3,000 வரையிலான சினோபோர்ம் தடுப்பூசிகளே தற்போது கிடைக்கவுள்ளன.

இந்நிலையில் முதற்கட்டமாக 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் 24 வாரங்களை தாண்டிய கர்ப்பிணிகள், நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளவர்கள் சுகாதார துறையினர் பிரதேச செயலகத்தில் மக்கள் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் பிரதேச சபையினர், இராணுவத்தினர் என பல்வேறு தரப்பினர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

அவ்வாறு கணக்கிடுகையில் 4000 இற்கும் மேற்பட்டவர்கள் உள்ளனர். ஆயினும் 3,000 இற்கும் உட்பட்ட தடுப்பூசிகளே முதலில் கிடைக்கவுள்ளன. இந்நிலையில் அரைவாசி பேருக்கே சிலவேளை தடுப்பூசிகள் வழங்கப்படலாம். ஆகவே தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள விரும்பும் மேற்கூறப்பட்ட பிரிவினுள் உள்ளவர்கள் தங்களது விவரங்களை மருத்துவமனை மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்களிடம் முற்கூட்டி பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

இதில் அக்கரைப்பற்று-8/1 8/2 9 நாவற்காடு மற்றும் ஆலையடிவேம்பு பிரிவுகளில் வாழும் மக்களும் விசேட கவனத்தில் கொள்ளப்படுவர் என்பதுடன் அடுத்த கட்டங்களில் ஏனையவர்களுக்கும் தடுப்பூசிகள் வழங்கப்படும் சந்தர்ப்பம் உள்ளது எனவும் கூறினார். இதேநேரம் அட்டாளைச் சேனை மற்றும் ஆலையடி வேம்பு பிரதேசத்தில் உள்ள இரு வைத்தியசாலைகளும் கொரோனா சிகிச்சை நிலையங்களாக விரைவில் செயற்படவுள்ளதுடன் இதனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திறந்து வைக்கவுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

## திருகோணமலை மாவட்டத்தில்

# நகர அபிவிருத்தித் திட்டம் : 4 பிரதேசங்கள் தெரிவு

திருகோணமலை மாவட்டத்தில் 4 பிரதேசங்கள், நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நகர அபிவிருத்தி அதிகார சபையால் அபிவிருத்தி செய்யப்பட உள்ளதாக கிழக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் கந்தளாய், பதவி சிறிபுர, புல்மோட்டை மற்றும் சேருவில ஆகிய பிர தேசங்கள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன என கிழக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகார சபையின் அத்தியட்சகர் எல். ஜே.லியனகே தெரிவித்தார்.

இத்திட்டம் தொடர்பிலான அனுமதி கிடைத்தமை தொடர்பிலான கடிதங்களின் பிரதிகளை, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபில புலன் அத்துகோரள மற்றும் மாவட்டச் செயலாளர் ஆகியோர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கு அமைவாக நாட்டில் 100 நகரங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாவற்காடு வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை பிரிவு திறப்பு

மட்டக்களப்பு, நாவற்காடு பிரதேச வைத்தியசாலையின் ஒரு பகுதியை கொரோனா சிகிச்சை பிரிவாக நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதாரசேவைகள்பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் மற்றும் நாவற்காடு பிரதேச வைத்தியசாலையின் வைத்தியர் உள்ளிட்டோர் அடங்கிய வைத்தியர்களால் குறித்த சிகிச்சைப் பிரிவு உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.



இங்கு நூறு கட்டில்கள் அமைக்கப்பட்டு நூறு நோயாளர்கள் தங்கி சிகிச்சை பெறக் கூடியதாக இந்த சிகிச்சைப் பிரிவு அமைந்துள்ளது. எனவும் நேற்று வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் திறக்கப்பட்ட கொவிட் சிகிச்சை நிலையங்களில் 667 நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கும் வகையில் 667 கட்டில்கள் இடப்பட்டுள்ளன.

என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி நாகலிங்கம் மயூரன் இதன்போது தெரிவித்தார்.

# கசிப்பு உற்பத்தி, விற்பனை; 2 நாள்களில் 10 பேர் கைது

பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை குற்றச்செயல் அதிகரித்துள்ளதாக மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி நியூட்டன் அவுஸ்கோன் தெரிவித்தார்.

கடந்த இரு நாள்களில் இக்குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து, மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களம் தொடர்ச்சியான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாள்களில் வெல்லாவெளி, கிரான் மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொடர்ச்சியான சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன்போது, வெல்லாவெளி பிரதேசத்தில் இருவரும் கிரான் மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் எண்மரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமையுடன் அவர்களுக்கு எதிராக நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடுவோரை உடனடியாகக் கைது செய்யுமாறு உத்தரவு





முல்லைத்தீவு மாவட்டத்தின் உப்புமாவெளி பகுதியில் பாரிய சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட சந்தேக நபர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு முல்லைத்தீவு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உப்புமாவெளி பிரதேசத்தில் உள்ள ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான காணியில் சட்டவிரோதமாக குவிக்கப்பட்டுள்ள பாரிய மணல் குவியல் தொடர்பாக, முல்லைத்தீவு பொலிஸாரால் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கை ஆராய்ந்த நீதிவான், மணல் அகழ்வுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, உப்புமாவெளி பகுதியில் மணல் குவிக்கப்பட்டுள்ள பகுதிகளை கனியவளத் திணைக்களத்தின் அதிகாரிகள், பொலிஸார் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது, குறித்த மணல் அகழ்வுக்கான அனுமதி பெறப்படவில்லை என முல்லைத்தீவு பொலிஸாருக்குத் தெரிவித்த அதிகாரிகள், யாழ்ப்பாணம் சென்று, இது தொடர்பான அறிக்கையை அனுப்புகிறோம் எனவும் கூறியிருந்தனர்.

இந்நிலையில் குறித்த இடத்தில் சட்டவிரோதமான முறையிலேயே மண்ணகழ்வு இடம்பெற்றது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இதுவரை பொலிஸார் யாரையும் கைது செய்யவில்லை .

அதனைவிட குறித்த சட்டவிரோத மண்ணகழ்வு இடம்பெற்றதை ஊடகவியலாளர்களே பொலிஸாருக்கு அடையாளம் காட்டியபோதும் தொடர் நடவடிக்கைகளில் ஊடகவியலாளர்களுக்கு அனுமதி பொலிஸாரால் மறுக்கப்படுகிறது.

உப்புமாவெளி பகுதியில் மணல் குவிக்கப்பட்டுள்ள பகுதிகளை கனியவளத் திணைக்களத்தின் அதிகாரிகள், பொலிஸார் பார்வையிட சென்றபோது ஊடகங்களுக்கு ஒளிப்படம் ,வீடியோ எடுக்க பொலிஸார் தடைவிதித்துள்ளனர்.

இதனால் பொலிஸார் இந்த சட்டவிரோத செயற்பாடுகளில் தொடர்புபட்டுள்ளனரா என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கின்றது .இவ்வளவு பாரிய மணல் அகழ்வு பொலிஸாருக்கு தெரியாமல் நடந்ததா இதுவரை அகழ்ந்தவரை அடையாளம் கண்டு (மூன்று நாள்களில்) கைது செய்ய முடியாதா என்ற பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை குறித்த மணல் குவிக்கப்பட்டுள்ள பகுதிகளை சூழ விமானப் படையினரும் ,பொலிஸாரும் இணைந்து ட்ரோன் கமரா மூலம் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

## காலி மாவட்ட முன்னாள் எம்.பி. புத்திக குருகுலரத்ன உயிரிழப்பு

காலி மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான புத்திக குருகுலரத்ன தனது 78 ஆவது வயதில் உயிரிழந்துள்ளார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜயரத்னே மலர்சாலையில் இன்று (வியாழக்கிழமை) காலை 9 மணியிலிருந்து மாலை 3 மணி வரையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இறுதிக்கிரியைகள் நாளை மாலை 3.30 மணிக்கு பொரளை மயானத்தில் நடைபெற உள்ளது. ஜூன் 19, 1943 இல் பிறந்த அவர், அம்பலங்கொட தர்மசோகா வித்யாலயத்தின் பழைய மாணவராவார்.

புத்திக குருகுலரத்ன ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி 1989 இல் நாடாளுமன்றம் பிரவேசித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நீதி அமைச்சர் அலி சப்ரியால் உணவுப்பொருள்கள் வழங்கல்




சீரற்ற வானிலை காரணமாக வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கொலன்னாவ மற்றும் வெல்லம்பிட்டி பிரதேச மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கும் நிகழ்வு நேற்று (புதன்கிழமை) இடம்பெற்றது.

ஜனாதிபதி சட்டத்தரணியும், நீதி அமைச்சருமான அலி சப்ரி குறித்த பொதியை மக்களுக்கு வழங்கி வைத்துள்ளார்.

கொவிட் 19 தொற்றுநோயை எதிர்கொண்டு சுகாதார வழிகாட்டுதல்களின் படி மெகொட கொலன்னாவ மற்றும் கோதட்டுவ, போபத்த ஆகிய இடங்களுக்கு பொருள்கள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொலன்னாவ மற்றும் வெல்லம்பிட்டிய ஆகிய பகுதிகள் ஆண்டுக்கு பல முறை வெள்ளத்தை எதிர்கொண்டு வருவதால், கொலன்னாவ பிரதேச செயலாளருக்கு உரிய நிறுவனங்களால் அதிகபட்ச உதவி வழங்கப்பட்டு வருவதாகவும், கூடிய விரைவில் தாழ்வான பகுதிகளில் தடைசெய்யப்பட்ட கால்வாய்கள் மற்றும் வடிகான் அமைப்புகளை அகற்றத் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்நிகழ்வில், பெற்றோலிய வளங்கள் நிறுவனத்தின் தலைவர் மொஹமட் உவைஸ், நீதி அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளர் பயாட் பாக்கீர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அசோக லங்காதிலக மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வவுனியா பல்கலைக் கழகம் அபிவிருத்திக்குப் பங்களிக்கும்

### யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் மங்களேஸ்வரன் தெரிவிப்பு

வவுனியா பிரதேசத்தின் அபிவிருத்தியிலும், வடமாகாண அபிவிருத்தியிலும் நாட்டின் அபிவிருத்தியிலும் வவுனியா பல்கலைக்கழகம் தமது பங்களிபபை வழங்கும் என்று யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியா வளாகம் பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள விடயம் தொடர்பாக இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

இன்றைய நாள் ஒரு மகிழ்ச்சிகரமான நாள். எதிர்வரும் 8 ஆம் மாதத்தில் இருந்து வவுனியா வளாகம் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளதாக வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியா வளாகம் 1991 ஆம் ஆண்டு வடமாகாண இணைந்த பல்கலைக்கழகமாக ஆரம்பிக்கப்பட்டு 1997 ஆம் ஆண்டு வவுனியா வளாகமாகத் தரமுயர்த்தப்பட்டது. அதனை பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்துவதற்கான செயற்பாடு நீண்டகால கோரிக்கையாக இருந்தது.

இந்தக் கோரிக்கை வவுனியா




வளாக சமூகத்தினராலும், வன்னிப் பிரதேச மக்களாலும் அரசியல்வாதிகளாலும் நீண்ட காலமாக விடுக்கப்பட்டு வந்தது. அந்தவகையில் இன்று இது அரச வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையில் இது வவுனியா வளாக சமூகத்திற்கும் வன்னிப் பிரதேச மக்களுக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான, நிகழ்வாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் அதனைத் தரமுயர்த்துவதற்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்களிப்பைச் செய்தவர்களுக்கு நாங்கள் நன்றி கூற கடமைப்பட்டவர்கள். அவர்களுக்கு வளாக சமூகத்தினது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு வன்னிப்பிரதேச மக்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இது தொடர்பாக வன்னியில் உள்ள அரசியல்வாதிகளும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து எமது நோக்கத்தை நிறைவு செய்வதற்குப் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளனர். அத்துடன் ஊடகத்துறையினரும் அது தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியிருந்தனர். அவர்களிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த பிரதேசத்தின் அபிவிருத்தியிலும், வடமாகாண அபிவிருத்தியிலும் நாட்டின் அபிவிருத்தியிலும் கல்வி, பொருளாதாரம், கலாசாரம் மேன்மேலும் அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக்கொண்டு இந்தப் பிரதேசத்திற்கு பொருத்தமான கல்வியையும், புதிய புதிய தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடிய கல்வியை, வழங்கக்கூடிய கற்கை நெறிகளையும் புதிய பீடங்களை ஆரம்பிப்பதற்கும் நாம் திட்டமிட்டுள்ளோம்.

விரைவில் மருத்துவத்துறை சார்ந்த கல்வியையும் வழங்குவதற்கு நாம் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளோம். நீண்ட காலக் கனவை நிறைவு செய்வதற்காக தோளோடு தோள் நின்று மக்கள் ஆற்றிய பங்களிப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் தெரிவித்துள்ளார்.

## புலம்பெயர் உறவுகளால் உலருணவு பொருள்கள்




புலம்பெயர் உறவுகளால் 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருள்கள் தர்மபுரம் பிரதேச மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன.

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்குவதற்காகப் புலம்பெயர் உறவுகளால் குறித்த நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தர்மபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 3 குடும்பங்கள் குறித்த நிதியை வழங்கியுள்ளதுடன், அவற்றை உலருணவு பொதிகளாக பாதிக்கப்பட்ட மக்களிற்கு வழங்குமாறு கையளித்துள்ளனர்.

குறித்த உலருணவுகள் பொதிகளாக்கப்பட்டு இன்று மக்களிடம் கையளிக்கப்பட்டதாக கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ஜீவராசா தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.06.2021இல் வெளியிடப்பெற்றது.